# மருதமலையில் பாம்பாட்டி சித்தர்

18 சித்தர்களுள் ஒருவராக போற்றப்படும் பாம்பாட்டி சித்தர் முருகனின் அருள் பெற்று மருதமலையில் வாழ்ந்தவர். காடு, மலை மற்றும் வனாந்திரங்களை வாசஸ்தலமாக கொண்டு சுற்றித் திரிந்தவர். பாம்பாட்டி சித்தர் ஒருமுறை இறந்து போன மன்னன் உடலில் கூடு விட்டு கூடு பாயும் வித்தை மூலம் புகுந்தாராம். இதேபோல் இறந்த பாம்பை ஆட்டு வித்ததால் இவர் பாம்பாட்டி சித்தர் என்று அழைக்கப்பட்டார்.

முருகன் இந்த பாம்பாட்டி சித்தரிடம் அருள் விளையாட்டுக்கள் செய்துள்ளார். மருதமலையில் பாம்பாட்டி சித்திரை வழிபடும் பக்தர்களுக்கு விஷத்தினால் வரக்குடிய தோஷங்கள் நிவர்த்தி அடைவதுடன், சரும ரோகங்களும் தீர்க்கப்படுகின்றன. அமைதி இல்லாத மனத்துடன் வந்து வழிபடும் பக்தர்களுக்கு அமைதி கிடைக்கிறது.


வாதம், வைத்தியம், ஞானம் கைகூட வேண்டும் என்று விரும்பும் பக்தர்கள் பாம்பாட்டி சித்தரை தரிசனம் செய்துவிட்டு சென்றால் அவர் பக்தர்களுக்கு பல ரூபங்களில் வந்து அருள் புரிவதாக ஐதீகம்.

பாம்பாட்டி சித்தர் மருதமலையில் இன்றும் அருள் வடிவமாக இருப்பதால், முருகனின் அருளைப் பெருக்கி பக்தர்களை ஈர்க்கும் சக்தியாகவும் விளங்குகின்றார். இந்த மலையில் பாம்பாட்டி சித்தர் தவம் செய்து முருகனை வழிபட்ட இடம் ஸ்தல விருட்சத்துக்கு நேர் எதிரில் அமைந்துள்ளது.

கோவிலின் தெற்குப் பகுதியில் உள்ள படிக்கட்டுக்கள் வழியாக கீழ் இறங்கி கிழக்கு திசை நோக்கி சென்றால் அங்கு பாம்பாட்டி சித்தர் சன்னதி உள்ளது. அங்கு உள்ள பாறையானது பாம்பு போன்ற அமைப்பில் இயற்கையாகவே அமைந்துள்ளது. இவர் இந்த தலத்தில் தங்கி சுரங்கப்பாதை மூலம் ஆதி மூலஸ்தானத்தில் உள்ள வள்ளி, தெய்வானை மற்றும் முருகப்பெருமானை வழிபட்டதாக கூறுகின்றனர்.

**பாம்பாட்டி சித்தர்**

இவர் ஆரம்பகாலத்தில் பாம்புகளை பிடிக்கும் தொழில் செய்து வந்தார். மருதமலையை அடுத்துள்ள காடுகளில் சுற்றி



திரிந்து பாம்புகளை பிடிப்பதென்பது இவருக்கு பொழுதுபோக்கு.

இவர் பாம்புகளின் விஷத்தை அருந்தியவர் என்பதை போகர் தமது நூலில்,

**'சுத்தமுடன் பாம்பினது விஷத்தைவாங்கி**
**துப்புறவா யருந்துகிற சித்துகேளே'**

என்று கூறுகிறார்.

இவருக்கு பூர்வீக புண்ணியத்தல் அருள் இருந்ததாலோ என்னவோ ஒருமுறை மாணிக்கக்கல்லை கொண்ட பாம்பு ஒன்று இருப்பதை அறிந்து காட்டிக்குள் செல்கிறார்.

**புற்றருகில் சென்றுமல் லோசித்தர் தாமும்**
**புனிதமுள்ள நவரத்னபா ம்புதன்னை**
**வெற்றியுடன் தான்பிடிக்கப் போகும்போது**
**வேதாந்த சட்டைமுனி யங்கிருந்தாரே**

பாம்பாட்டி சித்தர் அந்த புனிதமான மாணிக்கக்கல்லைக் கொண்ட நவரத்தின பாம்பை பிடிக்க புற்றின் அருகே போன போது, அங்கே வேதங்களின் உரைவிடமான சட்டைமுனி இருந்தார்.

சட்டைமுனி பாம்பாட்டி சித்தருக்கு உபதேசங்கள் பல கூறி தடுத்தாட்கொண்டார்.

''பாம்பாட்டியே, ஒன்றும் அறியாத இந்த பாம்புகளை ஆட வைத்து ஏன் வதைக்கிறாய். உனக்குள்ளேயே ஒரு பாம்பு உன் னையறியாமல் மறைந்திருக்கின்றது. முதலில் அதை பிடித்து ஆட வைத்து உனது கிரியை வலம் வர செய். அப்போது தான் நீ யா ரென்பது உனக்கு புலப்படும்'' என்று அருளி உபதேசம் செய்தார்.

அதன்பிறகு தான் சாதாரண பாம்பாட்டியாக இருந்தவர் பாம்பாட்டி சித்தராக உருகொண்டார். ரகசியத்தை உணர்ந்தார். தனது மூலாதாரத்திள்ள பாம்பை எழுந்தாட செய்து ஞான நிலையை அடைந்தார். சட்டைமுனி தொட்டுக் காட்டியதால் இவர் வாதம் வைத்தியம், யோகம், ஞானம் என பலவற்றிலும் சிறந்து விளங்கினார்.

இவரது பிறப்பைப் பற்றி போகர்.

**தாயான பாம்பாட்டி சித்ரப்பா**
**தாரணியில் நெடுங்கால மிருந்தசித்து**
**காயான முப்பழமும்பாலுங் கொண்ட**
**கலியுகத்தில் நெடுநாளா யிருந்தசித்து**

தாயுள்ளம் கொண்ட பாம்பாட்டி சித்தர் இந்த வையகத்தில், முக்கனிகளை உண்டு. பாலருந்தி பல காலம் யோக நிலையில் இருந்தார்.

இவர் ஜோகி என்கிற இருளர் வம்சத்தை சேர்ந்தவர். மயானத்தில் இருந்து யோகநிலை கண்டவர். கண்ணில்லா குருடர் பெற்ற பிள்ளை. பிறக்கும்போதே கழுத்தில் மாலை சுற்றி பிறந்தார். பல சித்தர் முனிவர்களிடம் உபதேசம் பெற்ற சித்தராவார்.

இவரது தந்தை குருடர் என்கிறார். தாயாரைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவர் கார்த்திகை மாதம் மிருகசீரிஷம் நட்சத்திரம் மூன்றாம் பாதத்தில் மிதுன ராசியில் பிறந்தார்.

கூடுவிட்டு கூடுபாயும் அற்புத சக்தியை கொண்டிருந்த இவர் நூற்றி அறுபத்து மூன்று வயது வரை இருந்து பிறகு சமாதி நிலை அடைந்தார்.

கோவை மாவட்டத்தில் உள்ள கோவில்களில் சிறப்பு வாய்ந்தது மருதமலை முருகன் கோவில். அறுபடை வீடுகளைக் கொண்டு குன்று தோறும் குமரன் எழுந்தருளி இருக்கும் இந்த மருதமலை 7-வது படைவீடு என பக்தர்களால் போற்றி வணங்கப்படுகின்றது.

**மருதமலை**

எழில் கொஞ்சும் இயற்கையான சூழலில் அமைந்திருக்கம் மருதமலை, அதன் மூன்று புறங்களிலும் மலை அரண்களால் சூழப்பட்டு உள்ளது. கோவிலுக்கு பின்புறம் அமைந்துள்ள மலைகளின் இயற்கை அமைப்போடு சேர்த்து பார்க்கும் போது மயில் தோகை விரித்தாற்போல் கட்சி அளிக்கின்றது. இதனால் முருகன் மயில் மீது அமர்ந்த தோற்றம் நம் கண்முன் தெரிகின்றனது.

மருத மரங்கள் அதிகமாகக் காணப்படுவதால் இந்த மலை மருதமலை என வழங்கப்படுகின்றது. மேலும், மருதமால்வரை, மருதவரை, மருத்தாசலம், வேள்வரை என்றெல்லாம் பேரூர் புராணத்தில் கூறப்படுகின்றது.

## தொன்மை சிறப்பு

மருதமலைக்கு முருக பக்தரான சித்தர் ஒருவர் வரும்போது, தாகம் மற்றும் களைப்பு ஏற்பட்டு மருதமரம் ஒன்றின் நிழலில் இளைப்பாறினார். அப்போது அந்த மரத்தடியில் இருந்து ஊற்று நீர் பீறிட்டுக் கிளம்பியது. இந்த அதிசயத்தைக் கண்ட சித்தர் மகிழ்ச்சி அடைந்தார். முருகன் திருவருளே இதற்குக் காரணம் என மகிழ்ந்த சித்தர் முருகப்பெருமானை மருதம்-சலம் ஆகியவற்றுக்கு தலைவா என வாழ்த்திப் பாடினார். அதுவே காலப்போக்கில் மருதாசலபதி என மருவி அழைக்கப்படுகின்றது என்பர். அசலம் என்ற வட சொல்லுக்கு தமிழில் மலை என்று பொருளாகம். எனவே மருதமரங்கள் அடர்ந்த மலை என்ற பொருளில் மருதாச்சலம் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கருதலாம்.

கி.பி. 12-ம் நூற்றாண்டில் மருதமலைத் திருக்கோவில் அமைக்கப்பட்டது என்றும், கொங்கு நாட்டின் 24 பிரிவுகளுள் ஒன்றான ஆறை நாட்டின் எல்லையாக மருதமலை இருந்தது என்றும் அறியலாம். பேரூர் புராணம், காஞ்சிப்புராணம், அருணகிரி நாதரின் திருப்புகழ் முதலிய நூல்களில் மருதமலை சிறப்பித்துக் கூறப்பட்டு உள்ளது.

## மூலிகை மரங்கள்

மருதமலையை மருந்து மலை எனக் கூறத்தக்க வகையில் மக்களின் உடல் பிணியும், மனப்பிணியும் நீக்கும் மூலிகை மரங்கள் உள்ளன. அருமையான காற்று, அமைதியான சூழல், மனதுக்கு மகிழ்ச்சியை தருகின்றது. தவம் செய்வோர் மற்றும் அருளாளர்கள் இறப்பு இல்லாத பெருவாழ்வு அடைய காயகல்பம் தேடி இந்த மலையில் வந்து தங்கினார்கள்.

காமதேனு என்ற தெய்வீகப்பசு, இந்த மலையில் பசி நீங்க மேய்ந்து மருதமரத்தின் கீழ் நல்ல தண்ணீரை பருகியதாக வரலாறு கூறுகின்றது.

## தான்தோன்றி விநாயகர்

இத்தகைய சிறப்பு பெற்ற மருதமலை அடிவாரத்தில் உள்ள படிக்கட்டுப் பாதையின் தொடக்கத்தில்தான் தான் தோன்றி விநாயகர் கோவில் உள்ளது. இந்த விநாயகரின் இயற்கை அமைப்பு மிக்க அழகுடையதாகும். பிற தலங்களில் காண்பதற்கு அரியதாகவும் உள்ளது.

இந்த விநாயகரை வணங்கிச் சென்றால் சரியாக 18 படிகளைக் கொண்ட பதினெட்டாம் படி உள்ளது. சபரிமலைக்கு சென்று ஐய்யப்பனை வழிபட இயலாத பக்தர்கள் இந்த 18-ம் படிக்கு வந்து வழிபட்டு செல்வார்கள்.

### கற்சிலையான திருடர்கள்

இந்த படியை கடந்து மேலே சென்றால் மலைச்சாரலில் 3 கற்கள் மாறுபட்ட நிறத்துடன் இருப்பதை காணலாம். அதாவது இந்த மூன்று கற்களும் சிலையாகி போன திருடர்கள் என்பார்கள். ஒருமுறை முருகன் அடியார்கள் கோவில் திருப்பணி நடந்தபோது பொன், பொருளை உண்டியலில் போட்டனர். இதைக் கண்ட 3 திருடர்கள் ஒருநாள் இரவில் வந்து உண்டியலை உடைத்து பொன்னையும், பொருளையும் திருட மலைச்சரிவு வழியாக சென்றனர்.

அப்போது முருகப்பெருமான் குதிரை வீரனைப் போல் சென்று அவர்களைப் பிடித்து நீங்கள் கற்சிலைகளாக மாறுவீர் என சபித்தாராம். இதனால் அந்த திருடர்கள் 3 பேரும் கற்சிலைகளாக நிற்பதாக செவிவழிச் செய்தி கூறுகின்றது.

### இடும்பன் கோவில்

இந்த தலத்தில் அமைந்துள்ள இடும்பன் கோவிலில், இடும்பனின் உருவம் உருண்டை வடிவமாக பெரிய பாறையில் உள்ளது. காவடியைச் சுமந்து கொண்டு இருக்கும் தோற்றத்தில் பொறிக்கப்பட்டு உள்ளது. இடும்பனை வணங்கினால் குழந்தை பேறு கிடைக்கும் என்பதால் பக்தர்கள் இடும்பனை வணங்கி செல்வார்கள்.

இடும்பனை வணங்கி சற்று மேலே சென்றால் குதிரைக் குளம்பு என்ற சுவடு உள்ளது. இதற்காக எழில்மிகு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. முருகப்பெருமான் சூரர்களை வெற்றி கொள்ள புறம்படும்போது அல்லது வெற்றியுடன் திரும்பி வரும்போது குதிரைக் குளம்புகள் படிந்த இடம் எனக் கூறுப்படு கிறது. உண்டியல் பொருட்களை திருடர்கள் திருடிச் செல்ல அவர் களை முருகப்பெருமான் தேடிச் சென்றபோது ஏற்பட்ட குதிரைக் குளம்படியாகவும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## ஆதி மூலஸ்தானம்

படி ஏறி மலையை அடைந்தால் நேரில் ஆதி மூலஸ்தான சன்னதி அமைந்துள்ளது. இந்த சன்னதி அருவுருவத் திருமேனி யாக லிங்க வடிவில் அமைந்துள்ளது. வள்ளி, தெய்வானை, சுப்பிரமணியர் மூவரும் லிங்க வடிவில் காட்சி தருகின்றனர். மூலஸ் தானமாகிய இங்குதான் முதலில் பூஜைகள் தொடங்குகிறது.

இயற்கை அழகுமிக்க மலைகளுக்கு இடையில் இதயம் போல் காட்சி அளிக்கும் அழகிய மலைக் கோவிலாம் மருதமலை மனதை கொள்ளை கொள்கின்றது.

## தீர்த்தம்

இந்த கோவிலில் மருதமலையான சிரசில் (தலை) கண்டி கையுடன், பின் பக்கம் குடுமியுடன், கோவணம் கொண்டு வலது திருக்கரத்தில் ஞானத் தொண்டு ஏந்தி, இடது திருக்கரத்தை இடை யில் அமைத்து வினைகளை வேரறத்தது எமன் பயம் தீர்த்து உண்மை அறிவை அறியச் செய்யும் நீண்ட வேலோடு உலகைக் காக்கும் மருதாச்சலமூர்த்தி அருள் பாலிக்கிறார். நமது நாட்டில் புனிதமாக விளங்கும் கிணறு, ஆறு, கடற்கரை இவை யாவும் சிவ மயத்தன்மை பெற்று இருக்கின்றது. இதில் நீராடும் போது உடற் பிணி, பிறவிப்பிணி நீங்குகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மருதமலையில் மருதத் தீர்த்தம், கன்னி தீர்த்தம் என்ற தெய்வீகத் தன்மை வாய்ந்த தீர்த்தங்கள் உள்ளன. இந்த தீர்த்தங்களில் நீராடுவோருக்கு செல்வங்கள் பெருகும் எனவும், உடற்பிணி நீங்கும் எனவும் புராணங்கள் கூறுகின்றன.

## உச்சிப்பிள்ளையார்

இந்த தலத்தின் மலை மீது வடக்காக சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உச்சிப் பிள்ளையார் அமைந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இதற்கான சரியான உருவ பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு ஒவ்வொரு சதுர்த்தி நாளிலும் அபிஷேக பூஜைகள் நடைபெற்று வருகின்றன. பக்தர் கள் தங்களது துன்பங்கள் நீங்கி இன்பமானது இடைவிடாது கிடைக்க வினை தீர்க்கும் உச்சிப் பிள்ளையாரை வழிபட்டுச் செல்கின்றனர்.

**பட்டீஸ்வரர் சன்னதி**

கோவிலில் பிரதான சன்னதிக்கு வலது புறமாக உட் பிரகாரத்தில் பட்டீஸ்வரர் சன்னதி, இடது புறம் மரகதாம்பிகை சன்னதி உள்ளது. மரகதாம்பகை சன்னதிக்கு எதிரே நவக்கிரக சன்னதியும், பிரதான சன்னதிக்கு எதிரேயுள்ள அலங்கார மண்ட பத்தின் இடது புறமாக வரதராஜ பெருமாள் சன்னதியும் உள்ளது. இதன் காரணமாக இங்கு உள்ள தீர்த்தத்துக்கு கன்னி தீர்த்தம் என்ற பெயர் அழைக்கப்படுகின்றது.

கோவில் மகா மண்டபத்தின் தென் கிழக்கில் கொரக் கட்டை, இச்சி, ஆலமரம், வக்காணை மரம் மற்றும் ஒட்டு மரம் ஆகிய 5 மரங்கள் ஒன்றாக பின்னிப் பிணைந்து வளர்ந்த அழகிய பழையமான மரம் ஒன்று அமைந்துள்ளது. இந்த மரத்தடியில் பஞ்சமுக விநாயகர் சிலை ஒன்று உள்ளது. இந்த மரத்தின் காற்று எல்லா நோய்களையும் தீர்க்கவல்லது என்றும், இந்த மரத்தில் பல முனிவர்கள் தவம் செய்து வருகிறார்கள் என்றும் கூறப்படு கின்றது. இந்த மரத்தின் வயது கணக்கிடப்படவில்லை. மேலும் இந்த கோவிலில் ஸ்தல விருட்சமாக மருதமரம் உள்ளது.

**ராஜகோபுரம்**

இத்தகைய சிறப்பு வாய்ந்த மருதமலைக்கு 7 நிலை கொண்ட ராஜகோபுரம் கட்டப்பட்டு அதன் கும்பாபிஷேக விழா சிறப்பாக நடந்தேறியது.

மருதமலை முருகன் கோவில் கோவை மாநகருக்கு மேற்கு சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மலை அடிவாரத்தில் இருந்து கோவிலுக்கு செல்ல கோவில் நிர்வாகம் சார்பில் மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.